DRAFT

# கிறிஸ்தவம்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் - 1

முன் பிள்ளை விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
மின்னஞ்சல் : info@nie.lk
இணையத்தளம் : www.nie.lk

# கிறிஸ்தவம்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் -1

முன் பிள்ளை விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
மின்னஞ்சல் : info@nie.lk
இணையத்தளம் : www.nie.lk

கிறிஸ்தவம்
முதலாம் தரம்
ஆசிரியர் வழிகாட்டி

முதற்பதிப்பு 2015

தேசிய கல்வி நிறுவகம்

**ISBN...................**

முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை.

மின்னஞ்சல் : **info@nie.lk**
இணையத்தளம் : **www.nie.lk**

பதிப்பு : தேசிய கல்வி நிறுவகம்

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

## கற்றலும் கற்பித்தலும்

ஆசிரியர்கள் தத்தமது பாடசாலைகளில் பாடத்திட்டங்களை அமுல்படுத்துவதற்குத் தேவையான அடிப்படைகளை இக்கையேடு வழங்குகிறது. இப்பாடத்திட்டத்தை அமுல்படுத்து கையில் ஆசிரியர்கள் மனதிலிருத்த வேண்டிய முக்கிய விடயம் என்னவெனில் தமது பங்களிப்பானது மாணவர்களின் அறிகைசார் அடைவு மற்றும் நடத்தைசார் அபிவிருத்தி என்பவற்றில் பாரதூரமானதும் தொலை நோக்கானதுமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதாகும்.

அறிகைசார் அடைவு என்னும் பரிமாணத்தைப் பொறுத்தவரை ஆசிரியர்கள் ஏனைய வற்றுக்கு (மற்றைய பயன்பாடுகளுக்கு) மத்தியில் கற்றல் தரம் உயர்வாக இருக்கக்கூடிய பின்வரும் விடயங்களில் கவனஞ் செலுத்த வேண்டும்.

- கற்பவர் தனது கல்விச் செயற்பாடுகள் தத்தமது வாழ்க்கைக் குறிக்கோள்கள் மற்றும் பணிகள் ஆகிய இரண்டும் இலக்கை அடைந்து கொள்ளுதல் மற்றும் ஆற்றல்களுக்குப் பொருந்தக்கூடிய வகையில் அமைந்துள்ளது என்பதைப் புரிந்திருத்தல் வேண்டும்.

- கற்றல்/ கற்பித்தல் செயன்முறையில் கற்பவர் தன்னை செயலூக்கத்துடன் ஈடுபடுத்திக் கொள்ளும் போது (மாணவர் செயன்முறை) கன்பூசியஸ் (Confusius) என்னும் அறிஞரது கருத்து இங்கு நினைவிற்கொள்ளத்தக்கது.

  ''அவர்கள் கேட்பவற்றை மறந்து விடுகின்றனர்.
  பார்ப்பவற்றை நினைவிற் கொள்கின்றனர் ஆனால்
  செயல் ரீதியாகத் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் போது, கற்றுக்கொள் கின்றனர்.''

- வளம் நிறைந்ததும் சவால்மிக்கதுமான சாதகமான கற்றல் சூழமைவு இருக்கும் போது கற்றல் ஆவணங்கள், உபகரணங்கள், ஆய்வு கூடங்கள், விடயங்கள் மற்றும் அனுபவங்களைப் பல்வேறு மூலங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களை உறுதிப்படுத்த வேண்டும்;

- கற்பவருக்கு ஆக்கபூர்வமானதும், அனுகூலமானதுமான உடனடிப் பின்னூட்டல் வழங்கப்படும் போது இவ்வாறு செய்வதன் மூலம் கற்பவர் தமக்கு ஏற்கனவே இருக்கக்கூடிய அறிவு, திறன்கள் மற்றும் இலக்குகள் என்பவற்றை ஒருங்கிணைப் பதுடன் உயர்மட்ட கிரகித்தலுடன் உள்ளீர்த்தலுடன் கூடிய கற்றலைப் படிப்படியாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

கல்வியைப் பொறுத்தவரை, பாடசாலைகளில் கல்வி பயிலும் சகல மாணவர்களும் தமது பாடஞ் சார்ந்த அடிப்படைகளில் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை அடையக்கூடிய தாக இருக்க வேண்டும் என்பதும் அதன் மூலம் பரீட்சைகளை எதிர்கொண்டதன் பின்னர் தாம் குறித்த அடைவைப் பெற்றுக்கொண்டோம் என்ற மகிழ்வை அனுபவிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதுமே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

மாணவரின் நடத்தைசார் அபிவிருத்தி எனும் பரிமாணத்தை எடுத்துக்கொள்வோமாயின் கல்வியின் இலக்கானது அறிகைசார் அடைவினை தொழில்சார் உலகுடன் தொடர்புபடுத்தலாகும். எனவே, ஆசிரியர்களது, கரங்களுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள இப்பாடத்திட்டமானது, பாடசாலைக்கு வெளியேயான உலகுடன் கற்பவர் தொடர்பு கொள்வதற்குத் தேவையான தேர்ச்சிகள்/ தகுதிப்பாடுகளை மேம்படுத்த வேண்டும். பின்வரும் பரப்புக்களில் சில முக்கியமானதும் பொதுவானதுமான தேர்ச்சிகள்/ தகுதிப்பாடுகள் காணப்படுகின்றன.

- ஆற்றல் மிகு (சுறுசுறுப்பாக) தொழில் தர்மம்; நேர்க்கணிய உளப்பாங்கு புதிது புனைதலுக்கான விருப்பு மற்றும் விடாமுயற்சி;

- நபர்களுக்கிடையிலான உறவுகள்; குழுச் செயற்பாடு ஒழுக்கம் மற்றும் வினைத் திறனான தொடர்பாடல்;

- தார்மீக விழுமியங்கள்; பன்முகத் தன்மையை மதித்தல் போன்ற குடியியல் விழுமியங்களை உருவாக்கிக் கொண்ட நபர்.

முடிவுரையாக பாடசாலைகளிலுள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதர அலுவலர்கள் அனைவரும் முகாமைத்துவத்திலுள்ள 4A க்களில் (உளப்பாங்கு (Attitude), பகுப்பாய்வு (Analysis), செயல்செயற்பாடு (Action), மற்றும் பொறுப்புக் கூறல் (Accountability), கவனஞ் செலுத்துகின்ற வகையில் கற்றல், கற்பித்தல் செயன்முறையைப் பார்க்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன். தாங்கள் என்ன செய்கிறீர்கள் என்பது பற்றிய முடிவுகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான பொருத்தமானதும் சாதகமானதுமான **உளப்பாங்குகளுடன்** ஆரம்பியுங்கள். (தங்களது பாடங்கள் முதலியன); ஒழுங்கமைப்பதற் கேற்ற வகையில், தகவல்களைத் தேடிப்பெற்றுப் **பகுப்பாய்வு** செய்க. (பாடத்திட்டங்கள் முதலியன); தெரிவுகளைக் கவனத்திற் கொண்டு, வினைத்திறனான உடனடிச் செயலை மேற்கொள்க (வழங்குதல்); **பொறுப்புக் கூறலை** (உரிமைத்துவம்) எடுத்துக் கொள்வதற் கேற்ற வகையில், மேற்பார்வை செய்தல், மதிப்பிடுதல் மற்றும் பெறுபேறுகளை அளவிடுதலை மேற்கொள்க.

கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாட்டில் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ள சகல ஆசிரியர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இக்கையேடு பற்றிய உங்களது அனுபவங்களையும் அவதானிப்புக்களையும் தேசிய கல்வி நிறுவகத்தின் (N.I.E) துணைத் தலைவருக்கு விருப்பமாயின் எனக்கும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**பேராசிரியர் குணபால நாணயக்கார**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்.

# பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட எந்தவொரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியாயமற்றவற்றைக் களைந்து, நல்லவற்றைப் பயன்படுத்தி புத்துலகைப் படைப்பதற்கான கருவியாக அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதி மிக்கவை எவையோ அவையும் கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். இவ்வகையில், கலைத்திட்டத்தில் அடங்குகின்ற பாடத்திட்டம், ஆசிரியர் வழிகாட்டிகள், வசதி செய்து கொடுப்போர் (Facilitator) போன்றவை யெல்லாம் கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கையின், பண்டைய அருஞ் செல்வங்களையும் நவீன செல்நெறிகளையும் உள்வாங்கி, தனது கல்விக் கோலத்தை மேம்படுத்தி வருகின்றது. சமகாலத் தேவைகளுக்கு அமைய, எட்டாண்டுகளுக்கு ஒரு தடவை கல்வி மறுசீரமைப்புகளினூடாக இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இந்த ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மை பேணப்படுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் சற்றேனும் மாறுபடாது, அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்கு உரியவை அல்ல. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாட விடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காக, கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஆக்கபூர்வமானதாக மாற்றி அமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மாணவரது அடைவு மட்டத்தை உயர் சதவீதத்துக்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதல் அளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி, மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்த முடியும். குறித்த பாடத்தின் பாட நூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இந்த ஆசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அல்ல என்பதை அறிந்து வழிகாட்டி, ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்ட பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை அண்மிக்கச் செய்தல் வேண்டும். அவ்வகையில் பாடத்தைக் கற்பிப்பதற்கு வழிகாட்டி, வசதிசெய்து கொடுப்பவர்களால் வகுப்பறையில் குறிப்பிட்ட பாடத்துக்குரிய கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் இறுதியில் மதிப்பீடு நடத்தப்பட வேண்டும். அவ்வாறான களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இந்த ஆசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
**மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்**

# கலைத்திட்டக் குழு

**ஆலோசனை, அனுமதி** : கல்விசார் அலுவல்கள் சபை, தேசிய கல்வி நிறுவகம்

**வழிகாட்டல்** : கலாநிதி வண. மாபுல்கொட சுமணரத்ன தேரர்.
பிரதி பணிப்பாளர் நாயகம்
அருட்பணி எபனேசர் ஜோசப்
செயலாளர் இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம்
அருட்தந்தை கால்டன் த சில்வா
விரிவுரையாளர் தேசிய கல்வி நிறுவகம்
கே.ஏ.டி.பி. சரத்சந்திர
பணிப்பாளர் முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை)

**அனுமதி** : கல்விசார் அலுவல்கள் சபை, தேசிய கல்வி நிறுவகம்

**இணைப்பாக்கம்** : திருமதி. நதி அமா ஜயசேகர
கல்வியாளர் தேசிய கல்வி நிறுவகம்
திருமதி. கே.ஆர்.எம். சகுந்தலா ரணசிங்ஹ
உதவி விரிவுரையாளர் தேசிய கல்வி நிறுவகம்

**எழுத்தாளர் குழு**

**உள் வளவாளர்**: திருமதி. நதி அமா ஜயசேகர

**வெளி வளவாளர் :** அருட்பணி ஜே.ஏ.மிஹிரி டி சில்வா
நிறைவேற்று செயலாளர் கல்வி ஆணையம்.

**தே.கி.ம.** அருட்பணி ரஞ்சனி லியனாராச்சி
தொண்டர் ஆசிரியர் இலங்கை பப்திஸ்த சபை
திருமதி. ரதிகா மெண்டிஸ்
ஆசிரியர் தூய தோமா கல்லூரி, கல்கிசை
திருமதி. எம்பி.செல்வநிதி பெரேரா
ஆசிரிய ஆலோசகர் (ஓய்வு நிலை)
திருமதி பி.ஏ.ஜி.தரிஜூ
ஆசிரியர். வெஸ்லி கல்லூரி கொழும்பு
செல்வி.கிதுமினி சல்காது
ஆசிரியர். மெதடிஸ்த உயர் பாடசாலை, கட்டுநாயக்க
திருமதி. பி. எஸ். புஷ்பகுமாரி
ஆசிரியர். லக்தாஸ் டி மெல் வித்தியாலயம், குருநாகல்

**மொழி பெயர்ப்பு :** திருமதி. எம் பி.செல்வநிதி பெரேரா

# கிறிஸ்தவ பாட ஆசிரிய வழிகாட்டியை பயன்படுத்துவதற்கான ஆலோசனை

கிறிஸ்தவ பிள்ளைகளின் சமய உணர்வுகளின் நோக்கு நம்பிக்கையும் விசுவாசமும் ஆகும். இறைவனால் அனைத்து ஆசிகளும் கிடைக்கின்றன என்பதை அறிந்து விசுவாசத்தை வளரச் செய்வர். அத்துடன் சுயமாகவே இறைவனுக்கு நன்றி செலுத்தி விண்ணப்பங்களை ஏறெடுப்பர். இது கிறிஸ்தவ பாடத்திட்டத்தில் ஆரம்பம் முதல் இறுதிவரை வெளிப்படுகின்றது. இதுமட்டுமல்ல இறைசாயலால் படைக்கப்பட்ட நாம் சுற்றாடல் பாதுகாப்பு, சமய வழிபாடு, வாழ்வில் திருவிவிலியத்தைப் பயன்படுத்தல் போன்ற கருத்துக்களில் அவதானத்தைத் செலுத்துமாறும் ஆசிரியர் வழிகாட்டி நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

**ஆரம்பப் பிரிவுக்கான தேர்ச்சிகள்**

1. கடவுள் அருளிய கொடைகளையும் உலகையும் அறிந்து கொள்வார். மதிப்பார். பாதுகாப்பார்.
2 கடவுளின் அன்பையும் பாதுகாப்பையும் அனுபவத்தில் காண்பார். மறு அன்பு காட்டுவார்
3 கடவுளின் அன்புக்கு மாறுத்தரமாக நற்பண்புகளை வளர்ப்பார்.
4 ஆண்டவர் இயேசுவை அறிந்து கொள்வார். அவரைப் பின்பற்றி வாழ்வார்.
5 இயேசுவின் வாழ்வின் விசேட பெறுமதிகளை அறிந்துகொள்வார்.
6 தூய ஆவியானவரை அறிந்து கொள்வார்.
7 கடவுள் அரசின் விழுமியங்களுக்கு ஏற்பச் செயற்படுவார்.
8 திருவிவிலியத்துக்கு ஏற்ப வாழ்வார்.

தரம் 1 - 5 வரையிலான ஆரம்ப பாடசாலை வகுப்புக்களில் கிறிஸ்தவ பாடத்தினைக் கற்று அனுபவத்தைப் பெறும் மாணவர் ஆரம்ப பாடசாலையின் இறுதியில் மேற்படி தேர்ச்சிகளை அடைந்திருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. முதலாம் தரத்துக்கான பாடவிடய உள்ளடக்கத்தை ஆசிரியர் வழிகாட்டியில் காட்டப்பட்டுள்ளவாறு கற்றல் - கற்பித்தல் வழிமுறைகளைப் பின்பற்றிக் கற்பித்தல் அவசியம். பாடப் புத்தகத்தை மட்டும் வாசித்து நடாத்தும் கற்பித்தல் எதிர்பார்க்கப்படுவதில்லை. அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாடுகளுடன் கற்பித்தல் சாதனங்களைப் பாவித்துக் கற்பித்தல் விரும்பத்தக்கது.

**கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு**

அனைத்து மாணவருக்கும் கிறிஸ்தவ பாடப்புத்தகம் வழங்கப்பட்டுள்ளது. ஆசிரியர் வழிகாட்டியானது பல செயற்பாடுகளுக்கு வழிகாட்டியாக அமைகின்றது. இவற்றுக்கு பொருத்தமான தரம் 1 இன் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் பின்வருமாறு:

- சுற்றாடலுடன் தொடர்புடைய மகிழ்வான செயற்பாடுகளும் விளையாட்டுக்களும்
- சமய வழிபாடுகளும் தொடர்பான செயற்பாடுகளும்
- பாடல், ஆடல், நடித்தல் ஆக்கம் சார்பான செயல்கள்

## பாடசாலை கொள்கையும் நிகழ்வு அட்டவணையும்

கிறிஸ்தவ பாடத்தின் பல தேர்ச்சிகள் பாடசாலை சார்பான கலாசார நிகழ்வுகளில் இணைத்துக் கொள்ளக் கூடியனவாக உள்ளன. அவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளும் வாய்ப்புக்கள் எமக்கு உள்ளன. மேலும் தேர்ச்சிகளைக் கட்டியெழுப்பும் பணியில் அவ்வாறே உறுதிப் படுத்தவும் முடியும். மேலும் இந்த தேர்ச்சிகள் கட்டியெழுப்பப்படும் பாடசாலைக் கலாசாரத்தை ஏற்படுத்துவதில் அதிபர் விசேட கவனம் எடுப்பது விரும்பத்தக்கது.

ஆரம்ப பாடசாலைக்காக செயற்படுத்தப்படும் சமய நிகழ்ச்சியானது, இதில் முக்கிய இடத்தை வகிக்கிறது. முதலாம் தரத்திற்காக மிகவும் எளிமையாக நடைபெறும் இந்த நிகழ்ச்சியை முறையாக முன்னேற்றலாம். பல நிகழ்வுகளை இதில் ஒன்றிணைக்கலாம்.

பாடசாலை அமைந்துள்ள இடத்தில் பங்குக் குரு அல்லது அண்மையிலுள்ள ஆலயம் அல்லது நிர்வாகக் குருவானவரைச் சந்திப்பதற்கு பிள்ளைகளுக்குச் சந்தர்ப்பம் வழங்குவதோடு ஒரு தவணையில் குறைந்தது இரண்டு தடவைகளாவது பிள்ளைகளைக் கோயிலுக்கு அழைத்துச் சென்று இறைதந்தையின அன்பை அவர்கள் அனுபவிப்பதற்கு அவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். உதவி, நல்லுறவு, ஒழுக்கம், தூய்மை, சுற்றாடலை அலங்கரித்தல், பாதுகாத்தல், ஆசிரியர்கள் மட்டில் மரியாதை ஒழுக்கம் போன்ற பாடசாலைக் கலாசாரத்தில் நடைபெறுகின்ற சிறப்பான தனித்துவம் ஆகியன வழியாக கிறீஸ்தவ மறை பாடத்தின் தேவையை நிறைவேற்றலாம். அதனால் பாடத்தில் கற்பிக்கின்ற அனைத்தும் செயன்முறைப்படுத்துவதோடு ஊட்டமும் பெறுகிறது.

## கணிப்பீடு

இந்தத் தரத்தின் போது முறைசார் கணிப்பீட்டை விட முறைசார்பற்ற கணிப்பீட்டிற்கு முதலிடமளிக்க வேண்டும். சமய செயற்பாடு, அழகு சேர்க்கும் வேறு செயற்பாடுகள், பாட நூலைப் பயன்படுத்துதல் போன்ற சந்தர்ப்பங்களில் பரிசீலனை, உரையாடல், வாய்மொழி வினா போன்ற முறைசார்பற்ற கணிப்பீட்டு முறை வழியாக இந்த வகுப்புக்கேற்ற சமய தேர்ச்சி வளர்ச்சியடைகிறதா என அடிக்கடி கணிப்பீடு செய்வது வரவேற்கத்தக்கது.

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iii |
| பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | v |
| கலைத்திட்டக் குழு | vi |
| கிறீஸ்தவபாட ஆசிரிய வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனை | vii |
| பாடசாலைக் கொள்கையும் நிகழ்வு அட்டவணையும் | viii |
| பாடத்திட்டம் | xix |
| கற்றல் கற்பித்தல் செயற்பாடுக்கான வழிகாட்டல் | 1-21 |

# பாடத்திட்டம்

# அறிமுகம்

தேசிய குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான அடிப்படைத் தேர்ச்சிகளிடையே, சமய மற்றும் விழுமியங்களுக்குரிய தேர்ச்சிகளைப் பிள்ளைகளிடையே கட்டியெழுப்புவது சமய பாடத்தின் பொறுப்பாகும்.

சிறு குழந்தையின் பிஞ்சு மனதிலே புதியதோர் விடயத்தை விதைப்பது இலகுவான விடயமாகும். அவ்வாறே நற்பழக்க வழக்கங்களுக்குப் பிள்ளைகளை இசைவுபடுத்துவதும் இலகுவில் ஆற்றக் கூடியவொன்றாகும். சிறு பிள்ளைகளில் காணப்படும் பண்புகளுக்குப் பொருந்தும் வகையில் இங்கு பல்வேறு செயற்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. பாட உள்ளடக்கத்திற்குப் பொருத்தமாகப் பிள்ளைக்கு உரிய தேர்ச்சியைப் பெற்றுக் கொடுத்துக் கற்றல் பேறுகளை அடைந்து கொள்வதற்கு அச் செயற்பாடுகள் உங்களுக்கு வழிகாட்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

சமூகத்தில் சமாதானம் மற்றும் ஒழுக்காற்றல் உருவாகுவதற்குச் சமயங்களினது பங்களிப்பு அத்தியாவசியம். பல விதங்களிலும் வலுவூட்டப்படும் நற்பணி செய்யும் நல்வாழ்வுக்குச் சமயம் வழிவகுக்கின்றது. சமூகத்தில் நற்பண்புகளுடன், கௌரவத்துடன் வாழ்வதன் முக்கியத் துவத்தைச் சமயம் எமக்கு அளிக்கின்றது. அதுமட்டுமல்ல எமது நம்பிக்கையின் அடிப்படையில் மரணத்தின் பின்னர் நிலைவாழ்வு பெறவும் சமயம் வழிகாட்டுகின்றது.

ஆரம்பப் பிரிவு மாணவர்களிடத்திலிருந்தே சிறந்த சமூகமொன்றினை ஆரம்பிக்கும் அடிப்படையினை ஆரம்பித்தல் வேண்டும். இவ் விடயத்திற்கான பாரிய பங்களிப்பினைப் பொறுப்பேற்றிருக்கும் அதிஷ்டசாலி ஆசிரியர் நீங்கள் ஆவீர். ஆகவே உங்களால் வழங்கப்படுகின்ற ஒத்துழைப்பினை மேலாக மதிக்கின்றோம்.

# தேசிய குறிக்கோள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கரு திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம், சமாதானம் என்பவற்றை மேம் படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீ கரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.
   *தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை (2003மார்கழி)*

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### (i) தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில்நுட்பத் தகைமை:

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல் விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழில்நுட்பத் தகைமை : கணினி அறிவு, கற்றலில், தொழிலில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

### (ii) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

### (iii) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

| | | |
|---|---|---|
| சமூகச் சூழல் | : | தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன் களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொது வானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப் பாடுகள் என்பவற்றில் அக்கறையும். |

### (iv) வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக்கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்; அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்; அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்; பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான சீவனோபாயத்தில் ஈடுபடல்.

### (v) சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

### (vi) ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள், மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.

### (vii) ''கற்றலுக்குக் கற்றல்'' தொடர்பான தேர்ச்சிகள்

விரைவாக மாறுகின்ற சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

# பாடக் குறிக்கோள்கள்

1. சமூகத்தை மதித்து வாழும் உண்மையான கிறிஸ்தவ பிள்ளையை உருவாக்குதல்.

2. கிறிஸ்தவ கொள்கைகளை பின்பற்றி வாழும் வாழ்வின் இலக்கைக் கட்டியெழுப்புதல்.

3. திருவிவிலியத்தை இறைவார்த்தையாக அறிவூட்டி அதற்கேற்ப வாழப் பழக்குதல்.

4. இறைவனுடன் ஆன்மீகத் தொடர்பை ஏற்படுத்தப் பயிற்றுவித்தல்.

5. திருவிவிலியத்தில் காணப்படும் உத்தமர்களின் நற்பண்புகளைப் பின்பற்றி வாழ வழிகாட்டல்.

6. இறைபடைப்பான சூழலைப் பாதுகாத்து பராமரித்து அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்லும் மனப்பான்மையை வளர்த்தல்.


7. இயற்கைச் சூழலில் இயற்கை அன்பு வெளிப்படும் நிகழ்வுகளை அறிதல்.


8. அனைவரையும் நேசித்து குழுவினருடன் ஒற்றுமையாகவும் ஒத்துழைப்புடனும் செயற்படும் ஆற்றலை வளர்த்தல்.

9. பிற மதங்களை மதித்து சகவாழ்வு வாழ்தல்.

10. சமாதானத்தை உருவாக்கும் பங்களிப்பு முறைகளை ஏற்படுத்தல்.

# ஆரம்பக் கல்வித் திட்டம



# கால ஒதுக்கீடு

## முதன்மை நிலை ஒன்று (தரம் 1 - தரம் 2)

| | பாடம் | வாரத்திற்கான நேர ஒதுக்கீடு |
|---|---|---|
| 01. | தாய்மொழி | 5.00 மணித்தியாலம் |
| 02. | கணிதம் | 3.30 மணித்தியாலம் |
| 03. | சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் | 5.30 மணித்தியாலம் |
| 04. | சமயம் | 1.15 மணித்தியாலம் |
| 05. | இரண்டாம் தேசிய மொழி | 30 நிமிடம் |
| 06. | காலை கூட்டமும் சமய அனுட்டானமும் | 1.15 மணித்தியாலம் (நாளொன்றுக்கு 15நிமி) |
| 07. | ஓய்வு | 1.15 மணித்தியாலம் (நாளொன்றுக்கு 15நிமி) |
| 08. | உணவு வேளை | 50 நிமிடம் (நாளொன்றுக்கு 10 நிமி) |
| 09. | உடல்நல செயற்பாடுகள் | 1.40 மணித்தியாலம் (நாளொன்றுக்கு 20நிமி) |
| 10. | பாடம் தொடர்பான செயற்பாடு | 30 நிமிடம் (வாரம் ஒருநாள்) |
| | வாரத்தில் மொத்த காலம் | 21 மணித்தியாலம் 15 நிமிடங்கள் |

| தொனிப் பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| 1.0 கடவுள் அருளிய கொடைகள். | 1.0 கடவுள் அருளிய கொடைகளையும் உலகையும் அறிந்து கொள்வார்/ பாதுகாப் பார்/ மதிப்பார். | 1.1 மனித உடல் இறை படைப் பாகும்.<br>• கண்கள் - அழகை காணல்<br>• செவிகள்-தொனிகளைக் கேட்டல்.<br>• நாக்கு - சுவைத்தலும் கதைத்தலும்<br>• கைகள் - நற்செயல் புரிதல்<br>• மூக்கு - மணத்தல் (திருப்பாடல் 8: 5-6)<br>1.2 நிலம் - வெயில் - மழை (தொ.நூல் 1:1) (தி.பா. 19:6) (யோபு 36: 27-28) (தி.பா. 104:5, 14<br>1.3 மலர்களும் மரங்களும் (தொ.நூ. 1: 11-13) |
| 2.0 கடவுளின் அன்பையும் பாதுகாப்பையும் அனுபவித்தல். | 2.0 கடவுளின் அன்பையும் பாதுகாப்பையும் அனுபவத்தில் கண்டுகொள்வார். மறு அன்பு காட்டுவார். | 2.1 பெற்றோர் - பாதுகாவலரின் அன்பு<br>2.2 சகோதரர் - சகோதரிகளின் அன்பு<br>2.3 உறவினர் - நண்பர்களின் அன்பு<br>2.4 ஆசிரியர்களின் அன்பு |
| 3.0 கடவுளின் அன்புக்கு மாறுத் தரமாக நற்பண்பு களை வளர்த்தல் | 3.0 கடவுளின் அன்புக்கு மாறுத்தரம் காட்டி கிறிஸ்தவ நற்பண்பு களை வளர்த்துக் கொள்வார். | 3.1 கிறிஸ்தவ விழுமியங்கள் |
| 4.0 ஆண்டவர் இயேசுவை அறிந்து கொள்ளல் | 4.0 ஆண்டவர் இயேசுவை அறிந்து கொள்வார். அவரைப் பின்பற்றுவார். | 4.1 மரியாளுக்கு கிடைத்த இறை செய்தி (லூக்கா 1:31)<br>4.2 இயேசுவின் பிறப்பு (லூக்கா 2: 4-7)<br>4.3 இடையர் இயேசுவைப் பணிதல் (லூக்கா 8-20)<br>4.4 ஞானிகளின் வருகை (மத்தேயு 2: 7-12) |

| தொனிப் பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| 5.0 இயேசுவின் வாழ் வின் சிறப்பு பண்பு களை அறிதல் | 5.0 இயேசுவின் வாழ்வின் விசேட சிறப்புப் பண்புகளை அறிந்து கொள்வார். | 5.1 ஐயாயிரம் பேருக்கு உண வளித்தல் (யோவான் 6: 1-14)<br>5.2 தனிமையாக இறைவனை வேண்டுதல் (மாற்கு 1:35) |
| 6.0 தூய ஆவியா னவரை அறிந்து கொள்வார். | 6.0 தூய ஆவியை அறிந்து ஒன்றி ணைந்து துதிப் பாடல் பாடுவார். | 6.1 தூய ஆவியானவர் (உரோ. 8: 26) (கலாத்தியர் 5:16) |
| 7.0 இறையரசின் விழுமியங்களுக்கு ஏற்பச் செயற்படுதல். | 7.0 இறையரசின் விழுமியங்களுக்கு ஏற்பச் செயற்படுவார். | 7.1 ஒற்றுமையாக வாழல் (லூக்கா 10: 30-37)<br>7.2 தன்னிடம் உள்ளவைகளை பகிர்ந்து கொள்ளல் (லூக்கா 10: 35-37)<br>7.3 பேதமின்றி ஒருவரையொருவர் பாதுகாத்தல் (லூக்கா 10: 35-37) |
| 8.0 திருவிவிலியத்தை வாழ்வுக்கு வழிகாட்டியாகக் கொள்ளல். | 8.0 திருவிவிலியத்துக்கு ஏற்பவாழ்வார். | 8.1 பழைய ஏற்பாட்டுக் கதை - தாவீது (திருப்பாடல் 145:1-2) (1 சாமுவேல் 16: 17-23)<br>8.2 புதியஏற்பாட்டுக் கதை நூற்று தலைவரின் மகன் குணமடைதல் (விசுவாசம்) (யோவான் 4: 46-51)<br>8.3 மரணத்தை வென்று உயிர்த்த இயேசு (மத்தேயு 28: 1-8) |

# கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்கான வழிகாட்டல்

**1.0 தொனிப்பொருள்: கடவுள் அருளிய கொடைகள்**

**1.0 தேர்ச்சி:-**
- கடவுள் அருளிய கொடைகளையும் உலகையும் அறிந்து கொள்வார்/ மதிப்பார்/ பாதுகாப்பார்.

**1.1கற்றற் பேறுகள்:-**
- கடவுள் படைத்த உடல் அவயவங்களைப் பாதுகாக்க வேண்டு மெனக் கூறுவார்.
- உடல் அவயவங்களைப் படைத்த கடவுளுக்குத் துதி செய்ய இணைந்து ஆடலுடன் பாடலைப் பாடுவார்.

**கற்றல் வளம்:**
- திருவிவிலியம் (திருப்பாடல் 8:5-6)
- பொம்மை
- பாடல் கிறிஸ்தவ கீதங்கள் 144
- கிறிஸ்தவ கீதம் இறுவட்டு - இசைக்கருவி
- வர்ணம் தீட்ட, பிள்ளையின் உருவம்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:-**

**செய்முறை 1:**
- முற்றத்தில் பிள்ளைகளுக்கு முன்னால் பெரிய பொம்மை ஒன்றை வையுங்கள்.
- கண்கள், காதுகள், நாக்கு, மூக்கு, கைகள், கால்கள், என உடல் உறுப்புக்களை அறிமுகம் செய்யுங்கள்.
- அவயவங்களுடன் மனிதனைக் கடவுள் படைத்துள்ளமையால் அர்த்தமுள்ள மகிழ்வான வாழ்வு தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
- எமக்கு வழங்கப்பட்டுள்ள அவயவங்களின் ஊடாகக் கடவுளின் அன்பு வெளிப்படுகின்றது என்பதை உறுதிப்படுதுங்கள்.
- கடவுள் தந்த உடலை மதித்துப் பாதுகாப்பதற்குப் பழக்கப்படுத் துங்கள்.

**செய்முறை 2:**
- கிறிஸ்தவ கீதங்கள் 144 பாடலின் முதல் 5 சரணங்களை இறுவெட்டில் கேட்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பாடலைத் தாளத்துடன் பாடச் செய்யுங்கள்.
- பாடலைப் பாடியவண்ணம் ஆடலிலும் ஈடுபடுத்துங்கள்.

"உலகத்தைப் படைத்து எல்லோருக்கும்
தந்த தேவ பிதாவுக்கு ஸ்தோத்திரம் கூறுவோம்.//
பல நிறப் பூக்களைப் பார்க்கத் தந்த
தேவ பிதாவுக்கு ஸ்தோத்திரம் கூறுவோம்.//
பட்சிகளின் சத்தங்களைக் கேட்கத் தந்த தேவ
பிதாவுக்கு ஸ்தோத்திரம் கூறுவோம்.//
எல்லா வேலையும் ஒழுங்காய் செய்திட கைகள் தந்த
தேவ பிதாவுக்கு ஸ்தோத்திரம் கூறுவோம்.//
விரும்பியவாறு விளையாடச் செய்ய கால்கள் தந்த
தேவ பிதாவுக்கு ஸ்தோத்திரம் கூறுவோம்.//"

**செய்முறை 3:**

- நிறம் தீட்டுவதற்காகப் பிள்ளையின் உருவமொன்றை மாணவர் களுக்கு வழங்குங்கள்.
- மாணவர் விரும்பியவண்ணம் நிறம் தீட்டுவதற்கு இடமளியுங்கள்.

**கணிப்பீடு :**

- கடவுள் தந்த உடல் அவயவங்களின் பெறுமதிகளை உணர்ந்து துதிப்பாடல் பாடுவார்.

**நடைமுறை வாழ்வின் பயன்பாட்டிற்காக**

- கடவுள் அருளிய உடல் அவயவங்களைப் பாதுகாத்து மதித்தல்.

1.0 **தொனிப்பொருள் :** **கடவுள் அருளிய கொடைகள்**

1.0 **தேர்ச்சி :** கடவுள் அருளிய கொடைகளையும் உலகையும் அறிந்து கொள்வார்/ மதிப்பார்/ பாதுகாப்பார்.

1.2 **கற்றற் பேறுகள்:**
- நிலமும் வெயிலும் மழையும் கடவுளின் அருட்கொடைகள் என ஏற்றுக் கடவுளுக்குத் துதி செலுத்தச் சித்திரம் வரைவார்.

**கற்றல் வளம் :**
- தொ. நூ.1: 1-14 திருப்பாடல் 19:6 யோபு 36:27-28
- சூரியோதயக் காட்சி - படம்
- மழை பெய்யும் படம்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்:-**

**செய்முறை 1 :**
- மாணவரை வெளியே அழைத்துச் செல்லுங்கள்.
- சூரிய உதயக் காட்சியைப் பார்ப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- காலை, பகல், மாலை, சூரிய ஒளியின் வேறுபாடும் அழகும் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்..
- இப்போது மழை பெய்தால் அதன் அழகை விபரியுங்கள்.
- நீங்கள் எங்கே உட்கார்ந்து இருக்கின்றீர்கள்? என வினவி நிலம் தொடர்பாக அவதானத்தைத் செலுத்துங்கள்.
- நாம் வாழ்நாள் முழுவதும் நிலத்தில் வாழ்கின்றோம் எனவும் நிலம் பெறுமதிமிக்க வளம் எனவும் அறிவுறுத்துங்கள்.
- நிலம் - சூரியன் - சூரியக் கதிர் - மழை என்பனவற்றைப் படைத்தவர் கடவுள் என்பதை அறிவுறுத்துங்கள்.
- மாணவரை அரைவட்டத்தில் அமரச் செய்யுங்கள்.
  ‘‘சூரியன் - மழை படங்களைக் காட்டிக் கலந்துரையாடுங்கள்.
  சூரியன் உதிக்கும் - வெயில் அடிக்கும் - பூ மலரும் - மரம் அசையும் அன்புடனே ஆண்டவர் படைத்தார் எமக்கே
  மழை பெய்யும் மண் வளமடையும் - தென்றல் வீசும் - உலகம் அமைதியுறும் அன்புடனே ஆண்டவர் படைத்தார் எமக்கே’’

**செய்முறை 3:**
- திருவிவிலியப் பகுதியை வாசியுங்கள்
- நிலம் - வெயில் - மழையின் பயன்களைக் கலந்துரையாடுங்கள்.
- வெயிலும் மழையும் கடவுளின் அருட்கொடைகள் என்பதற்காகச் துதி ஜெபம் செய்யுங்கள்.
- கடவுள் படைத்த நிலம் - வெயில் - மழை என்பனவற்றுக்காகப் பாடலைப் பாடுவர்..

நடைமுறை வாழ்வின் பயன்பாட்டிற்காக
- வரட்சியான இடங்களில் மழை பெய்ய வேண்டுமென குடும்ப விண்ணப்பம் செய்தல்.

**1.0 தொனிப்பொருள்:** கடவுள் அருளிய கொடைகள்

**1.0 தேர்ச்சி:** கடவுள் அருளிய கொடைகளையும் உலகையும் அறிந்து கொள்வார்/ மதிப்பார்/ பாதுகாப்பார்.

**1.3 கற்றற் பேறுகள்:**
- பல்வேறு மரங்கள், மலர்களுக்காகக் கடவுளைத் துதி செலுத்த ஆக்கத்தில் ஈடுபடுவார்.
- கடவுள் படைப்பைப் பாதுகாப்பதற்குச் செயற்பட வேண்டிய முறைகளை இணைந்து கலந்துரையாடுவார்.

**கற்றல் வளம்:-**
- திருவிவிலியம்: தொடக்க நூல் 1:11-13
- உலர்த்திய பூக்கள் இலைகள் காய்ந்த ஓலை இலை போன்ற உருவத்தில் ஒட்டுவதற்கான பொருட்கள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்:-**

**செய்முறை 1:**
- பாடசாலைத் தோட்டம் அல்லது பூந்தோட்டத்துக்கு மாணவரை அழைத்து செல்லுங்கள்.
- கடவுளின் அழகிய படைப்பைக் கண்டு மகிழ இடமளியுங்கள்.
- மரங்களைப் பாதுகாக்க வேண்டுமென மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- பயணத்தின் போது கீழே விழுந்து கிடக்கும் மலர்களையும் இலைகளையும் பொறுக்கிச் சேர்ப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- சுற்றாடலில் காணப்படுபவைகளை எமது தேவைகளுக்கு மட்டும் பயன்படுத்த வேண்டும்.

**செய்முறை 2 :**
- திருவிவிலியப் பகுதியின் கருத்துக்களைக் கலந்துரையாடல்
- மாணவர் வகுப்பறைக்குள் வந்த பின்னர் ஆயத்தம் செய்த மரத்தை குழுவினரின் மேசையின் மேல் வையுங்கள்.
- சேகரிக்கப்பட்ட மலர்களையும் இலைகளையும் மரத்தின் உருவத்தின் மேல் ஒட்டுவதற்கு இடமளியுங்கள்.

**செய்முறை 3 :**
- பின்வரும் பாடலை மாணவருடன் சேர்ந்து பாடுங்கள்.

  “**மரங்கள் தோறும் பூக்களினால் எழிலை எங்கும் தந்திடுதே**
  **பூக்கள் முழுதும் பறித்திட்டால் சில மட்டுமே மிகுதி**
  **மரங்களின் நிலையும் கவலையே பூக்கள் முழுதும் பறித்திட்டால்**
  **வண்ணத்துப் பூச்சியும் பசியால் வாடிடுமே**”

**கணிப்பீடு :**
- கொலாஜ் முறையில் மரத்தை ஆக்கம் செய்து கடவுளுக்குத் துதி செய்வார்.

**நடைமுறை வாழ்வின் பயன்பாட்டிற்காக :-**
- மரம் நட்டு வளர்த்தல்

**2.0 தொனிப்பொருள் : கடவுளின் அன்பும் பாதுகாப்பையும் அனுபவித்தல்**

**2.0 தேர்ச்சி :** கடவுளின் அன்பையும், பாதுகாப்பையும் அனுபவத்தில் கண்டு கொள்வார். மறு அன்பு காட்டுவார்.

**2.1 கற்றற் பேறுகள்:•** கடவுளின் அன்பை வாழ்வில் உணர வழிகாட்டும் பெற்றோர் பாதுகாவலருக்கு நன்றி மடல் தயாரிப்பார்.

**கற்றல் வளம் :**
- கிறிஸ்தவ கீதங்கள் பாடல் இலக்கம் 144 இன் 1,6,8 சரணங்கள்
- நன்றி வாழ்த்து மடல் தயாரிப்பதற்குத் தேவையானவை
- இசைக்கருவி

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்:-**

**செய்முறை 1 :**
- கிறிஸ்தவ கீதம் பாடல் இலக்கம் 144 இன் 1, 6, 8 சரணங்களை ஒலிப்பதிவு நாடாவில் கேட்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- கடவுளின் அன்புக்குத் துதி செலுத்த நடனமாடிப் பாடலைப் பாடுதல்.

**உலகத்தைப் படைத்து எல்லோருக்கும் தந்த**
**தேவ பிதாவுக்கு ஸ்தோத்திரம் கூறுவோம்** //

**பெற்றோர் எம்மைப் பேணத் தந்த**
**தேவ பிதாவுக்கு ஸ்தோத்திரம் கூறுவோம்** //

**உண்மை அன்புக்கு உள்ளம் தந்த**
**தேவ பிதாவுக்கு ஸ்தோத்திரம் கூறுவோம்** //

**செய்முறை 2:-**
- பெற்றோர், பாதுகாவலரைப் பற்றி மாணவருடன் கலந்துரை யாடுங்கள்.
- அவர்கள் எங்களை நேசித்துப் பாதுகாக்கின்றனர் என்பதை அறியச் செய்யுங்கள்.
- பெற்றோர் மற்றும் பாதுகாவலர் இறையன்பை அனுபவத்தில் காணச் செய்யுங்கள்.
- பெற்றோர் பாதுகாவலருக்கு மாணவர் செய்யக் கூடிய உதவி களைக் கேட்டறியுங்கள்.
- அவ்வாறு உதவி செய்தல் இறையன்புக்கான மறு அன்பு ஆகும் என்பதை அறியச் செய்யுங்கள்.
- வாழ்த்து மடல் தயாரிப்பதற்கான பொருட்களை வழங்குங்கள்.
- அம்மா - அப்பா நன்றி என எழுதுவதற்கு வழிகாட்டுங்கள்.

**கணிப்பீடு :**
- பெற்றோர் பாதுகாவலருக்கு நன்றி மடல் தயாரிப்பார்.

**நடைமுறை வாழ்வின் பயன்பாட்டிற்காக :**
- விசேட நாளொன்றின் வாழ்த்து மடல் தயாரித்து வயோதிபர் ஒருவருக்கு வாழ்த்து மடல் தயாரித்தல்.

**2.0 தொனிப்பொருள் : கடவுளின் அன்பையும் பாதுகாப்பையும் அனுபவித்தல்**

**2.0 தேர்ச்சி :** கடவுளின் அன்பையும் பாதுகாப்பையும் அனுபவத்தில் கண்டு கொள்வார். மறு அன்பு காட்டுவார்.

**2.2 கற்றற் பேறுகள்:**
- கடவுளின் அன்பையும் பாதுகாப்பையும் உணர உதவும் சகோதார/ சகோதரிகளின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வார்.

**கற்றல் வளம்:**
- கடதாசிப் பூக்கள் தயாரிப்பதற்குத் தேவையான பொருட்கள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்:-**

**செய்முறை 1:**
- தமக்கு அன்பும் பாதுகாப்பும் வழங்கும் சகோதர சகோதரிகள் கடவுள் அருளும் கொடைகள் எனக் கலந்துரையாடுங்கள்.
- அவர்களுக்கு நாம் மலர் வழங்கி மகிழ்விப்போம் என அறிவுறுத் துங்கள்.
- தேவையான பொருட்களை வழங்கிப் பூக்கள் தயாரிக்க வழி காட்டுங்கள்.
- அவற்றை வீட்டுக்குக் கொண்டு சென்று சகோதர சகோதரிகளுக்கு வழங்க வழிகாட்டுங்கள். (சகோதர சகோதரிகள் அற்றவர் உறவு முறையிலான சகோதர சகோதரிகளுக்குப் பூக்கள் தயாரித்தல்)

**செய்முறை 2 :**
- சகோதர சகோதரிகளுக்கு அன்பு காட்டும் முறைகளைக் கலந்துரை யாடுங்கள்.

  உ+ம்
- பிரச்சனைகள் தோன்றும் சந்தர்ப்பங்கள்
- இரவு நித்திரைக்குப் போகுமுன்னர் வாழ்த்துக் கூறுதல்
- சுகவீன வேளைகளில் ஜெபம் செய்தல்
- சுவையான உணவுகளைப் பகிர்ந்து கொள்ளல்
- சகோதர சகோதரிகளின் உதவி தேவைப்படும் சந்தர்ப்பங்களையும் அவற்றை நிவர்த்தி செய்யும் முறைகளையும் முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேற்படி சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி சகோதர சதோதரிகளின் அன்பையும் பாதுகாப்பையும் மதிப்பதற்குப் பழக்கப்படுத்துங்கள்.

**கணிப்பீடு :**
- சகோதர சகோதரிகளினால் அன்பும் பாதுகாப்பும் தமக்கு கிடைத்த சந்தர்ப்பங்களைக் கூறுவார்.

**நடைமுறை வாழ்வின் பயன்பாட்டிற்காக :-**
- சகோதர சகோதரிகளுடன் அன்புடன் ஒற்றுமையுடன் இணைந்து வாழல்.

**2.0 தொனிப்பொருள்: கடவுளின் அன்பையும் பாதுகாப்யையும் அனுபவித்தல்**

**2.0 தேர்ச்சி :** கடவுளின் அன்பையும் பாதுகாப்பையும் அனுபவத்தில் கண்டு கொள்வார். மறு அன்பு காட்டுவார்.

**2.3 கற்றற் பேறுகள்:**
- கடவுளின் அன்பையும் பாதுகாப்பையும் அறிந்து கொள்ள உதவும் உறவினரின் நண்பரின் சரிதைகளைப் பாத்திரமேற்று நடித்துக் காட்டுதல்.

**கற்றல் வளம் :**
- விளையாட்டு வீடு
- உறவினர் நண்பர் சரிதைக்கு ஆடை அணிகள்
- பொதிசெய்யப்பட்ட பரிசுப் பொருட்கள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்:-**

**செய்முறை 1**
- உறவினரின் அன்பும் பாதுகாப்பும் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- உறவினர் நண்பர் கடவுளின் கொடைகள் எனக் கூறி அவர் களால் இறைபாதுகாப்பும் அன்பும் கிடைக்கின்றது என்பதை அறிவூட்டுங்கள்.

**செய்முறை 2:-**
- மாணவரை இரு குழுக்களாகப் பிரித்துப் பொருத்தமான சரிதை களை வகுத்துக் கொடுத்தல்.
- பாடசாலைத் தோட்டத்தில் கட்டப்பட்டுள்ள விளையாட்டு வீட்டுக்கு ஒரு குடும்பத்தை அழைத்துச் செல்லுங்கள்.
- மற்றக் குழுவினர் உறவினராக உடைகள் அணிந்து நடித்துப் பரிசுப் பொருட்களுடன் வீட்டுக்கு வருகை தருதல்.
- இரு குடும்பங்களும் சுமுகமாக ஒருவரையொருவர் வாழ்த்தி உறவு முறைகளை அறிமுகம் செய்தல்.

**கணிப்பீடு :-**
- உறவினர் நண்பர்களின் சரிதைகளை நடித்துக் காட்டி இறையன்பை அனுபவத்தில் கண்டு கொள்வார்.

**நடைமுறை வாழ்வின் பயன்பாட்டிற்காக :-**
- உறவினர், நண்பர்களை அன்புடன் கவனித்தல்

**2.0 தொனிப்பொருள் : கடவுளின் அன்பையும் பாதுகாப்யையும் அனுபவித்தல்**

**2.0 தேர்ச்சி :** கடவுளின் அன்பையும் பாதுகாப்பையும் அனுபவத்தில் கண்டு கொள்வார். மறு அன்பு காட்டுவார்.

**2.4 கற்றற் பேறுகள்:**
- கடவுளின் அன்புக்குப் பிரமாணிக்கமாக ஆசிரியருக்கு நன்றி வாழ்த்து மடல் தயாரிப்பார்.

**கற்றல் வளம்:**
- வாழ்த்து மடல் தயாரிப்பதற்குத் தேவையான பொருட்கள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்:-**

**செய்முறை 1**
- நீங்கள் ஏன் ஆசிரியரை நேசிக்கின்றீர்கள்? என்பது தொடர்பாகத் தமது கருத்துக்களைக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆசிரியர் மாணவரை நேசிக்கின்றனர் என்பதை வலியுறுத்துங்கள்.
- பின்வரும் பாடலை மாணவருடன் சேர்ந்து பாடுங்கள்.

ஆசிரியர் என்றும் என் தாயே - ஆசியுடன் என்னைக் காண்பவரே
ஆசான் இன்றும் என் குருவே - ஆற்றல் முழுவதும் வளர்ப்பவரே
சுகமாய் நீண்ட ஆயுளுடன் - சுபீட்ச வாழ்வை நீர் பெற்றிடவே
இயேசுவை நிதமும் வேண்டிடுவேன்-இறைவன்ஆசி நிறைந்திடவே

**செய்முறை 2 :-**
- ஆசிரியர் காட்டும் அன்புக்காக வாழ்த்து மடல் தயாரிப்பதற்கு வழிகாட்டுங்கள்.
- அதில் விருப்பமான சித்திரம் வரைய அறிவுறுத்துங்கள்.
- ஆசிரியரை நேசிக்கின்றேன் என எழுதப்பட்ட கடதாசித் துண்டுகளை வழங்கி வாழ்த்து மடலில் ஒட்டுவதற்கு வழிகாட்டுங்கள்.
- அதனை வீட்டுக்குக் கொண்டு சென்று பெற்றோருக்குக் காட்டி மீண்டும் மறுநாள் பாடசாலைக்குக் கொண்டு வந்து ஆசிரியருக்கு வழங்கி வாழ்த்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**கணிப்பீடு :-**
- வாழ்த்து மடலை வழங்கி ஆசிரியரை வாழ்த்தி அன்பை வெளிப்படுத்துவார்.

**நடைமுறை வாழ்வின் பயன்பாட்டிற்காக**
- ஆசியரைக் கௌரவப்படுத்தல்.

**3.0 தொனிப்பொருள் : கடவுளின் அன்புக்கு மாறுத்தரமாக நற்பண்புகளை வளர்த்தல்**

**3.0 தேர்ச்சி :** கடவுளின் அன்புக்கு மாறுத்தரம் காட்டி கிறீஸ்தவ நற்பண்புகளை வளர்த்துக் கொள்வார்.

**3.1 கற்றற் பேறுகள்:**
- முன்மாதிரியான கிறிஸ்தவ பிள்ளையாக வாழ்ந்து கடவுள் அன்புக்கு மாறுத்தரம் காட்டுவா
- எப்போதும் நற்செயல்களில் ஈடுபடுவார்.
- நற்பண்புகளை வாழ்வில் கடைப்பிடிப்பார்.

**கற்றல் வளம் :**
- பொருத்தமான பாடல் (நற்பண்புகள்)
- நற்பண்புகள் எழுதப்பட்ட மட்டைகள்
- சித்திரம் வரைவதற்குத் தேவையான பொருட்கள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்:-**

**செய்முறை 1:**
- பாடல்
- ஆசிரியர் பாடலைப் பாடுதல் அல்லது இறுவட்டு உபயோகித்து கேட்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- நற்பண்புகளை மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

**செய்முறை 2 :**
- வீட்டில் அல்லது பாடசாலையில் வெளிக்காட்டும் நற்செயல்கள் பற்றிய கருத்துக்களைக் கூறுவதற்கு இடமளியுங்கள். அவற்றுள் ஒன்றைச் சித்திரமாக வரையச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**செய்முறை 3 :**
- நற்பண்புகள் எழுதப்பட்ட மட்டைகள் காணப்படும் அட்டை ஒவ்வொன்று வழங்கி முன்னால் வந்து பொருத்துமாறு அறிவுரை வழங்குங்கள். கைகளைத் தட்டிப் பாராட்டுங்கள்.

**செய்முறை 4 :**
- மாணவரில் நற்பண்புகள் வளர்வதற்கு ஜெபம் செய்யுங்கள்.

**கணிப்பீடு :**
- நற்பண்புகள் வெளிப்படுமாறு முன்மாதிரியான கிறிஸ்தவ பிள்ளை யாக வாழ்வார்.

**நடைமுறை வாழ்வின் பயன்பாட்டிற்காக :-**
- நற்பண்புச் செயல்கள் மற்றும் நற்பண்புகளை நாள்தோறும் வாழ்வில் வெளிக்காட்டி நல்லதொரு கிறிஸ்தவ பிள்ளையாக வாழ முயற்சி செய்வார்.

**4.0 தொனிப்பொருள் : ஆண்டவர் இயேசுவை அறிந்து கொளளல்.**

**4.0 தேர்ச்சி :** ஆண்டவர் இயேசுவை அறிந்து கொள்வார். அவரைப் பின்பற்றுவார்.

**4.1 கற்றற் பேறுகள்:**
- மரியாளுக்குக் கிடைத்த இறை செய்தியின் ஊடாக இறை மகனாகிய இயேசுவை அடையாளப்படுத்த ஆக்கபூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுவார்.

**கற்றல் வளம் :**
- திருவிவிலியம் (லூக்கா 1 : 31)
- வானதூதரின் சரிதையை நடித்துக் காட்டுவதற்குத் தேவையான ஆடை அணிகள்
- கொலாஜ் தயாரிப்பதற்குத் தேவையானவை

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்:-**

**செய்முறை 1:**
- முன்னர் அறிவிக்கப்பட்டு ஆயத்தம் செய்த மாணவர் மரியாள், வானதூதர் பாத்திரங்களை வகுப்பில் நடித்து காட்டுவதற்கு இடமளியுங்கள்.
- வானதூதராக நடிப்பவர் இயேசுவின் பிறப்பைப் பற்றிய செய்தியை கூறச் செய்யுங்கள்.
- மரியாளாக நடிப்பவர் மரியாளின் மறுமொழியை வெளிப்படுத்த இடமளியுங்கள்.
- இறைவிருப்பத்துக்குக் கீழ்ப்படிதலின் முக்கியத்துவத்தை அறிவூட்டுங்கள்
- பாத்திரமேற்று நடிக்கப்பட்ட நாடகத்தில் மரியாளுக்குக் கிடைத்த இறைசெய்தியால் இறைவன் இயேசுவை அறிதல் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.

**செய்முறை 2:**
- லூக்கா 1.3.1 வாசித்து வழிகாட்டுங்கள்.
- "இயேசு" எனும் பெயர் எழுதப்பட்ட $A_4$ கடதாசியை வழங்கி கொலாஜ் முறையில் அதனை அலங்கரிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**கணிப்பீடு :-**
- கொலாஜ் முறையில் "இயேசு" எனும் பெயரைத் தயாரிப்பார்.

**நடைமுறை வாழ்வின் பயன்பாட்டிற்காக :-**
- இறை சித்தத்திற்குக் கீழ்ப்படிதல்.

**4.0 தொனிப்பொருள் : ஆண்டவர் இயேசுவை அறிந்து கொள்ளல்.**

**4.0 தேர்ச்சி :** ஆண்டவர் இயேசுவை அறிந்து கொள்வார், அவரைப் பின்பற்றுவார்.

**4.2 கற்றற் பேறுகள் :**
- இயேசு உலகில் இறைமகனாக அவதரித்தார் என்பதை விசுவாசித்து நத்தார் கீதம் பாடுவார்.

**கற்றல் வளம் :**
- திருவிவிலியம் (லூக்கா 2 : 4 - 7)
- மாட்டுக்கொட்டிலின் மாதிரியுரு
- குழந்தை இயேசுவை வெளிக்காட்டும் ஆக்கம்.
- புதுப்பாட்டு பாடல் புத்தகம் 72

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்:-**

**செய்முறை 1 :**
- வைக்கோல் மீது வைக்கப்பட்ட குழந்தை இயேசுவை வைத்து மாணவர்கள் அதனை அவதானிப்பதற்கு இடமளியுங்கள்.
- இயேசுவின் பிறப்பின் கதையைக் கூறுவதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**செய்முறை 1:**
- இயேசுவின் பிறப்பைப் பற்றிய பாடலை இணைந்து பாடுவதற்குச் (புதுப்பாட்டு, பாடல் புத்தகம் 72 ) சந்தர்ப்பம் வழங்குங்கள்.

“பார் முன்னணை ஒன்றின் தொட்டில் இன்றியே
பாலனாம் நம் இயேசு கிடந்தனரே
வெளியில் புல்மீது தூங்கும் பாலன் தாம்
காண மின்னிட்டதே வான் வெள்ளிகள் தாம்”

“மா, மா என்னும் சத்தம் கேட்டு விழிப்பார்
ஆயின் பாலன் இயேசு அழவே மாட்டார்
நான் நேசிக்கும் நாதா நீர் நோக்கிப் பார்ப்பீர்
தூக்கத்தில் நீர் தங்கி இராவெல்லாம் காப்பீர்”

**கணிப்பீடு :**
- இயேசுவின் பிறப்புப் பாடலை இணைந்து பாடுவர்.

**நடைமுறை வாழ்வின் பயன்பாட்டிற்காக :**
- நத்தார் காலத்தில் மாட்டுக்கொட்டில் அமைப்பார்.

**4.0 தொனிப்பொருள் : ஆண்டவர் இயேசுவை அறிந்து கொள்ளுதல்**

**4.0 தேர்ச்சி :** ஆண்டவர் இயேசுவை அறிந்து கொளவார். அவரைப் பின்பற்றுவார்.

**4.3 கற்றற் பேறுகள் :**
- இயேசுவைப் பக்தியுடன் வணங்குவார் ஞானிகளின் கதைகளை மகிழ்வுடன் கேட்டு மகிழ்வார்.

**கற்றல் வளம்:**
- திருவிவிலியம் மத்தேயு 2:7-12 லூக்கா 2:8-20
- மாட்டுக்கொட்டில், குழந்தை இயேசு, மரியாள், யோசேப்பு உருக்கள்
- கிறிஸ்தவ கீதம் 213 அல்லது பொருத்தமான பாடல்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்:-**

**செய்முறை 1 :**
- மாணவரை அரைவட்டத்தில் உட்காரச் செய்யுங்கள்.
- மண்ணால் நிரப்பிய மேசையில் வைக்கப்பட்ட மாட்டுக்கொட்டில், குழந்தை இயேசு, அதற்கருகில் மரியாள், யோசேப்பின் உருவங் களைக் காட்சியாக அமையுங்கள்.
- மாணவரிடம் இடையர்கள், ஞானிகளின் களிமண் உருவங் களைப் பகிர்ந்தளியுங்கள்.
- இடையர் ஞானிகளின் உருக்களை இயேசுவின் அருகில் வைப்பதற்கு வழிகாட்டுங்கள்.
- அவற்றைக் குறித்து கருத்துக்களை வெளிப்படுத்த இடமளியுங்கள்
- கிறிஸ்தவ கீதம் 213 அல்லது பொருத்தமான பாடலைப் பாடுங்கள்

**கணிப்பீடு :**
- குழந்தை இயேசுவைப் பார்க்க வந்தவர்களின் பெயர்களைக் குறிப்பிடுவார்.

**நடைமுறை வாழ்வின் பயன்பாட்டிற்காக :-**
- நத்தார் வழிபாட்டில் குடும்பமாக இறைவனை வழிபடுவார்.

**5.0 தொனிப்பொருள் : இயேசுவின் வாழ்வின் சிறப்புப் பண்புகளை அறிதல்**

**5.0 தேர்ச்சி :** இயேசுவின் வாழ்வின் விசேட சிறப்புப் பண்புகளை அறிந்து கொள்வார்.

**5.1 கற்றற் பேறுகள்:**
- அற்புதங்கள் செய்த இயேசுவைப் பற்றிக் கற்றறிந்து விசுவாசத் துடன் தமது கருத்துக்களைக் கூறுவார்.

**கற்றல் வளம்:**
- திருவிவிலியம் (யோவான் 6 : 1 - 14)
- கேலிச்சித்திரம் உருவப்படங்கள் (Cartoon)
- படக் கதைக்கான உருவப்படங்கள்
- கொடிப்பட்டி
- சித்திரம் வரையத் தேவையான பொருட்கள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்:-**

**செய்முறை 1:**
- ஆயத்தம் செய்த பட்டியால் கொடியைக் கட்டுங்கள்.
- மாணவரை அரைவட்டத்தில் அமரச் செய்யுங்கள்.
- திருவிவிலியப் பகுதிக்கேற்ப ''ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல்'' கதையில் முதல் நிலையைக் காட்டும் சித்திரத்தைக் கொடியில் கட்டுங்கள்.
- கதை தெரிந்த மாணவர் இருப்பின் கூறுவதற்கு இடமளியுங்கள்
- மனதைக் கவரும் வண்ணமாகக் கதையைக் கட்டியெழுப்புங்கள்
- இறுதி நிகழ்வு வரை படக்கதையை கொடியில் காட்டிக் கதை யைக் கட்டியெழுப்புங்கள்.
- அற்புதம் செய்த இயேசுவில் விசுவாசத்தை ஏற்படுத்துங்கள்.

**செய்முறை 2:**
- மாணவரை அரைவட்டமாக அமரச் செய்யுங்கள்.
- பின்வரும் பாடலை, கைகளைக் கோர்த்து அசைவுடன் வட்டமாக பாடிச் செல்வதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்

''ஐந்து அப்பம் இரண்டு மீன்கள் சிறுவன் கையில்
கொடுத்தான் அன்று இயேசுவுக்கு சந்தோஷமாக
ஆசீர்வதித்த பின் பிட்டுக் கொடுத்து
ஐயாயிரம் பேரின் பசியைப் போக்கினார்.''

**கணிப்பீடு :**
- இயேசு செய்த அற்புதத்தைக் கூறுவார்.

**நடைமுறை வாழ்வின் பயன்பாட்டிற்காக :-**
- கொடை உள்ளம் வேண்டி குடும்ப விண்ணப்பம் செய்வார்.

**5.0 தொனிப்பொருள் : இயேசுவின் வாழ்வின் சிறப்புப் பண்புகளை அறிதல்**

**5.0 தேர்ச்சி :** இயேசுவின் வாழ்வின் விசேட சிறப்புப் பண்புகளை அறிந்து கொள்வார்

**5.2 கற்றற் பேறுகள் :**
- இறைவனை நோக்கித் தனியாக ஜெபம் செய்த இயேசுவின் ஜெப வாழ்வின் வழிகாட்டலைப் பெறுவார்.

**கற்றல் வளம் :**
- திருவிவிலியம் (மாற்கு 1 : 35)
- சிறு பிள்ளை ஜெபம் செய்யும் படம்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்:-**

**செய்முறை 1 :**
- அமைதியான சுற்றாடல் / பாடசாலைத் தோட்டத்துக்கு மாண வரை அழைத்து செல்லல்.
- தியானம் செய்வதற்கு மாணவரை ஆயத்தப்படுத்துங்கள்.
- சிறு பிள்ளை கைகளைக் கூப்பிய வண்ணம் ஜெபம் செய்யும் படத்தைக் காட்சிபடுத்துங்கள்.

**செய்முறை 2:**
- தியான சிறு பாடலில் மாணவரின் அவதானத்தைச் செலுத்துங்கள்
- பாடல் முடிவில் ஜெபத்துடன் மாற்கு 1 : 35 வாசித்து இயேசு தமது தந்தையுடன் ஜெபத்தின் ஊடாகக் கதைத்தார் என்பதை விளக்குங்கள்.

**செய்முறை 3 :**
- மாணவர் விரும்பிய நிலையிலிருந்து ஜெபம் செய்ய இடமளியுங்கள்.

**செய்முறை 4 :**
- வழிகாட்டலுடன் பொது விண்ணப்பத்தில் ஈடுபடுத்துங்கள்.

**கணிப்பீடு :**
- தனிப்பட்ட ஜெபம் செய்தல்.

**நடைமுறை வாழ்வின் பயன்பாட்டிற்காக :-**
- புதிய நாளின் உதயத்தில் தனிமையாக விண்ணப்பம் செய்தல்.

**6.0 தேர்ச்சி : தூய ஆவியானவரை அறிந்து கொள்வார்.**

**6.1 கற்றற் பேறுகள்:** • தூயஆவியை அறிந்து ஒன்றிணைந்து துதிப்பாடல் பாடுவார்.

**கற்றல் வளம் :**
- திருவிவிலியம் (உரோமர் 8 : 26, கலாத்தியர் 5 : 16) பாடல்
- சிட்டி விளக்கு
- சிறுபாடல்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்:-**

**செய்முறை 1 :**
- மாணவரை அரை வட்டத்தில் அமரச் செய்யுங்கள்.
- மாணவர் மத்தியில் சிட்டி விளக்கை ஒளிரச் செய்யுங்கள்.
- திருவிவிலியப் பகுதியைப் பக்தியுடன் வாசியுங்கள்.
- அதிலிருந்து தூய ஆவியானவரைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- தூய ஆவியானவரைக் காணமுடியாது ஆனாலும் அவர் எம்முடன் வாசமாக இருக்கின்றார் எனக் கூறுங்கள்.

**செய்முறை 2 :**
- பாடலைத் தாளத்துடன் மாணவருடன் சேர்ந்துப் பாடுங்கள்.

"**தூயாவியானவர் உலகில் வசிக்கின்றார்** //
**தூயாவீயானவர் உலகில் வசிக்கின்றார்**
**என்றென்றும் என்னுள் வசிக்கின்றார்**"

"**தூயாவியானவர் வழி காட்டுகின்றார்** //
**தூயாவியானவர் வழி காட்டுகின்றார்** //
**அன்புடன் என்றும் வழிகாட்டுகின்றார்**"

"**தூயாவியானவரை துதித்துப் பாடுவோம்** //
**தூயாவியானவரை துதித்துப் பாடுவோம்** //
**துதிப்போம் துதிப்போம்**"
(இரட்சகர் இயேசென்னைக் காக்க வல்லோர் என்ற பாடலுக்கு ஏற்பப் பாடுவார்)

**கணிப்பீடு :**
- தூய ஆவியானவரைப் பற்றிப் புதிய பாடலைக் கற்றுத் தாளத் துடன் பாடுவார்.

**நடைமுறை வாழ்வின் பயன்பாட்டிற்காக :**
- அனைத்துச் செயல்களிலும் தூய ஆவியானவரின் வழிகாட் டலைத் தேடி விண்ணப்பம் செய்தல்.

**7.0 தொனிப்பொருள்: இறையரசின் விழுமியங்களுக்கு ஏற்பச் செயற்படுதல்**

**7.0 தேர்ச்சி :** இறையரசின் விழுமியங்களுக்கு ஏற்பச் செயற்படுவார்.

**7.1 கற்றற் பேறுகள்:**
- ஒன்றிணைந்து வாழ்வதற்காக நல்ல சமாரியனின் உவமையின் முன்மாதிரியைப் பின்பற்றுவார்.

**கற்றல் வளம் :**
- திருவிவிலியம் (லூக்கா 10: 30 -37)
- நல்ல சமாரியர் உவமையைக் காட்டும் படங்கள்.
- உவமை கதையில் காணப்படும் பாத்திரங்களின் உருவப்படங்கள் (மாணவரின் கொப்பியில் ஒட்டுவதற்காக) குரு, லேவியர், சமாரியர், கழுதை, சாவடி
- பிளனல் பலகை

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்:-**

**செய்முறை 1 :**
- நல்ல சமாரியர் உவமையைப் பொருத்தமான படங்களைப் பொருத்திக் கதையைக் கூறுங்கள்.
- உவமையில் காணப்படும் பின்வரும் பாத்திரங்களை அதாவது (குரு, லேவியர், சமாரியர், கழுதை, சாவடி) ஒழுங்குமுறையில் ஒட்டுவதற்கு வழிகாட்டுங்கள்.

**செய்முறை 2 :**
- அன்றைய சமூகத்தில் சமாரியர் ஒதுக்கப்பட்டவராக இருந்தாலும் அவனது செயற்பாட்டால் ஒற்றுமை உருவாகியமையை உறுதிப் படுத்துங்கள்.
- எவரையும் துன்புறுத்தாது உலகில் அனைவருடனும் ஒற்றுமையாக வாழ்தல் இறைபிள்ளையின் பண்பு என்பதை அறிவூட்டுங்கள்.
- மாணவருடன் இணைந்து பாடலைப் பாடுங்கள்.

**கணிப்பீடு :**
- நல்ல சமாரியர் கதையைக் கூறுவார்.

**நடைமுறை வாழ்வின் பயன்பாட்டிற்காக :**
- இறைவனின் பிள்ளைகளாக பிறருடன் ஒற்றுமையுடன் வாழல்.

**7.0 தொனிப்பொருள் : இறையரசின் விழுமியங்களுக்கு ஏற்பச் செயற்படுதல்**

**7.0 தேர்ச்சி :** இறையரசின் விழுமியங்களுக்கு ஏற்பச் செயற்படுவார்.

**7.2 கற்றற் பேறுகள்:**
- நல்ல சமாரியர் விழுந்து கிடந்த மனிதனுக்குத் தன்னிடம் உள்ளவற்றைப் பகிர்ந்தளித்தலை நடித்துத் தன்னிடம் உள்ள வற்றைப் பிறருக்கு வழங்கப் பழக்கப்படுவார்.

**கற்றல் வளம் :**
- திருவிவிலியம் (லூக்கா 10: 33 -35
- எண்ணெயும் திராட்சை இரசமும்
- காயத்தை கட்டப் பட்டி
- பண உறை

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்:-**

**செய்முறை 1 :**
- முதல் நாள் கற்ற நல்லசமாரியர் உவமையை நினைவுபடுத்துங்கள்.
- சமாரியர் விழுந்துகிடந்த மனிதனுடன் பகிர்ந்த பொருட்களின் உறையைக் குழுக்களுக்குக் கொடுங்கள்.

**செய்முறை 2 :**
- நிகழ்வில் காணப்படுவது போன்று பாத்திரங்களைத் தெரிவு செய்யுங்கள்.
- சமாரியர் விழுந்து கிடந்த மனிதனுக்கு எண்ணெயும் திராட்சை மதுவும் வார்த்து, அவற்றைக் கட்டி, தாம் பயணம் செய்த விலங்கின் மீது ஏற்றிச் சாவடிக்குக் கொண்டுபோய், பணத்தை செலுத்தியமையை நடிப்பதற்கு வழிகாட்டுங்கள்.

**கணிப்பீடு :**
- சமாரியர் தம்மிடம் இருந்தவைகளை விழுந்து கிடந்த மனிதனுடன் பகிர்ந்த முறைகளை விபரிப்பார்.

**நடைமுறை வாழ்வின் பயன்பாட்டிற்காக :**
- நாளாந்த வாழ்வில் கிடைக்கும் பரிசுகளைப் பிறருடன் பகிர்ந்து கொள்வார்.

**7.0 தொனிப்பொருள் : இறையரசின் விழுமியங்களுக்கு ஏற்பச் செயற்படுதல்**

**7.0 தேர்ச்சி :** இறையரசின் விழுமியங்களுக்கு ஏற்பச் செயற்படுவார்.

**7.3 கற்றற் பேறுகள்:**
- பேதம் பாராது பிறரைப் பராமரிக்கப் பழகுவார்.

**கற்றல் வளம் :**
- திருவிவிலியம் (லூக்கா 10: 33 -35)
- பாடல்
- பொம்மைகள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்:-**

**செய்முறை 1 :**
- நல்ல சமாரியன் உவமை மூலமாகப் பராமரித்தல் தொடர்பான சந்தர்ப்பத்தை அறிவுறுத்துங்கள்.
- பேதம் காட்டாது சமூகத்தில் பிறரைப் பராமரித்து வாழும் சந்தர்ப்பங்களைக் கூறுங்கள்.
- அவ்வாறான நிகழ்வுகளை வயோதிபரிடமிருந்து அறிந்து கொள்ளுமாறு அறிவுரை வழங்குங்கள்.
- வெள்ளைத் தாளில் அந் நிகழ்வைச் சித்திரமாக வரையச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- சித்தரங்களைச் சேகரித்து சிறு நூல் தயாரித்து நாம் ஒருவரை யொருவர் பராமரிப்போம் என்ற தலைப்பை எழுதுங்கள்.

**செய்முறை 2 :**
- பேதங்ளை மறந்து ஒருவரையொருவர் பாதுகாக்க வேண்டும் என்ற கருத்துப் பிரதிபலிக்குமாறு பாடலைப் பாட வழிப்படுத் துங்கள்.

"**பாடல் கிறிஸ்தவ கீதங்கள் 170**
**சின்ன பாப்பாக்கள் - கைகள் விரித்து**
**காலால் நடந்து - ஹாய் ஆடி வருவார்**
**பேதமும் இல்லை - சண்டையும் இல்லை**
**இயேசு நாதருக்குள் - ஒன்றாய் இருக்கிறோம்**"

**கணிப்பீடு :**
- பேதமின்றி ஒருவரையொருவர் பராமரிக்கும் நிகழ்வு ஒன்றைச் சித்திரமாக வரைவார்.

நடைமுறை வாழ்வின் பயன்பாட்டிற்காக :
- இனம், குலம், நிறம், மதம், வறுமை, செல்வம் பேதங்களைப் பாராது அனைவரையும் பாதுகாத்தல்.

**8.0 தொனிப்பொருள் : திருவிவிலியத்தை வாழ்வுக்கு வழிகாட்டியாகக் கொள்ளல்.**

**8.0 தேர்ச்சி :** திருவிவிலியத்துக்கு ஏற்ப வாழ்வார்.

**8.1 கற்றற் பேறுகள்:**
- கடவுளைத் துதிக்க கடவுளால் வழங்கப்பட்டுள்ள ஆற்றல்களை வளர்த்து தாவிதைப் போன்று மகிழ்வுடன் இசைக் கருவியை வாசிப்பார்.

**கற்றல் வளம் :**
- திருவிவிலியம் - ஐ சாமுவேல் 16: 17-23, திருப்பாடல் 145:17
- மாணவருக்குத் தெரிந்த சிறு பாடல்
- தாவீது வீணை வாசிக்கும் படம்
- சிரட்டை, கரண்டி, குவளை(இசைக்கருவி அமைக்க)

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செய்முறை 1 :**
- மாணவரை வகுப்பறைக்கு வெளியே அழைத்துச் செல்லுங்கள்.
- தாவீது வீணை வாசிக்கும் படத்தைக் காட்சிப்படுத்துங்கள்.
- மாணவர் கொண்டு வந்துள்ள உபகரணங்களைச் சிறு பாடலுக் கேற்ப இசைப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- திருவிவிலிய பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளதைக் கூறுங்கள்.
- திருவிவிலிய பகுதியைக் கலந்துரையாடுங்கள்.
- கடவுள் பல்வேறு ஆற்றல்களை அளித்துள்ளார் என்பதை அறிந்துகொள்ளச் செய்யுங்கள்.
- தாவீது தனது இளமைக்காலத்தில் தனது ஆற்றலினால் கடவுளைத் துதித்தான் என்பதை விளங்கப்படுத்துங்கள்.
- கடவுள் அளித்துள்ள ஆற்றல்கள் வெளிப்படும் வண்ணம் கலந்துரையாடுங்கள்.

**கணிப்பீடு :**
- பல்வேறு உபகரணங்களை இசைத்து சிறு பாடலைப் பாடுங்கள்.

**நடைமுறை வாழ்வின் பயன்பாட்டிற்காக :**
- தமது ஆற்றல்களை கடவுளின் மகிமைக்காகப் பாவிப்பதற்கு வழிகாட்டுங்கள்.

**8.0 தொனிப்பொருள்: திருவிவிலியத்தை வாழ்வுக்கு வழிகாட்டியாகக் கொள்ளல்.**

**8.0 தேர்ச்சி :** திருவிவிலியத்துக்கு ஏற்ப வாழ்வார்.

**8.2 கற்றற் பேறுகள்:**
- இயேசு குடும்பத்தின் மருத்துவர் என்ற விசுவாசத்தில் ஜெபம் செய்வார்.

**கற்றல் வளம் :**
- திருவிவிலியம் (யோவான் யோவான் 4: 46 - 51))
- அரச அலுவலர் போன்று அலங்கரிக்கப்பட்டவர்
- சித்திரம் வரைவதற்கு தேவையான பொருட்கள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்:-**

**செய்முறை 1 :**
- முன்னர் ஆயத்தம் செய்த ஒருவர் உரோம அதிகாரியைப் போன்று அலங்கரிக்கப்பட்டு வகுப்பறைக்குள் வரச் செய்யுங்கள்.
- மாணவருக்கு அறிமுகம் செய்வியுங்கள்.
- அரச அலுவலர் சுயசரிதை கதை கூறுவதில் ஈடுபடுத்துங்கள்.
- தனது மகன் நோயுற்று இருக்கின்றான் எனக் கூறுங்கள்.
- இயேசுவிடம் அவனை நலமாக்க வேண்டி வந்துள்ளதாகக் கூறுங்கள்.
- இயேசு ''புறப்பட்டுப் போம்'' என்று கூறியபோது பணிவுடன் சென்றதாகக் கூறுங்கள்.
- நான் போய்க்கொண்டிருந்த போது மகன் குணமாக்கப்பட்டான் என பணியாளர்களால் செய்தி கிடைத்தது எனக் கூறுவார்.
- அரச அலுவலருடன் மாணவர் கலந்துரையாடச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுங்கள்.
- இயேசு குணமாக்கும் மருத்துவர் என மாணவர் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கலந்துரையாடுங்கள்.

**செய்முறை 2 :**
- அயல் வீடுகளில் சுகவீனமாக இருப்பவர்களின் தகவல்களைச் சேகரியுங்கள்.
- அவர்களுக்காக இணைந்து விண்ணப்பம் செய்யுங்கள்.

**கணிப்பீடு :**
- அரச அலுவலரின் மகன் குணமாக்கப்பட்ட கதையைக் கூறுவார்.

**நடைமுறை வாழ்வின் பயன்பாட்டிற்காக :**
- நோயாளருக்காகக் குடும்ப ஜெபத்தில் விண்ணப்பம் செய்தல்.

**8.0 தொனிப்பொருள்: திருவிவிலியத்தை வாழ்வுக்கு வழிகாட்டியாகக் கொள்ளல்.**

**8.0 தேர்ச்சி :** திருவிவிலியத்துக்கு ஏற்ப வாழ்வார்.

**8.3 கற்றற் பேறுகள்:**
- இயேசு மரணத்தை வென்ற உயிர்த்த இறைவன் என்பதை விசுவாசிப்பார்.

**கற்றல் வளம் :**
- திருவிவிலியம் (மத்தேயு 28: 1-8)
- பிரிஸ்டல் மட்டை வர்ணம் கத்தரிக்கோல்
- நிறக் கடதாசி

**செய்முறை 1:.**
- இயேசுவின் உயிர்த்தெழுதல் கதையை மாணவருக்குச் சுவையாகக் கூறுங்கள்.
- வாரத்தின் முதல் நாள் பெண்கள் கல்லறைக்குச் செல்ல வழிகாட்டுங்கள்.
- வானதூதர் அவர்களுக்கு காட்சியளித்தமை பற்றிக் கூறுங்கள்.
- இயேசு உயிர்தெழுந்தார் என அறிவியுங்கள்.
- பெண்கள் அதை விசுவாசித்ததாகக் கூறுங்கள்.

**செய்முறை 2 :**
- பொருட்களை உபயோகித்து கல்லறையின் மாதிரியுரு தயாரிப் பதற்கு வழிகாட்டுங்கள்.

**செய்முறை 3:** பின்வரும் பாடலை மாணவருடன் இணைந்து பாடுங்கள

**"அல்லேலூயா துதி மகிமை என்றும்**
**இயேசுவுக்கே செலுத்திடுவோம்**
**ஆ அல்லேலூயா**
**அல்லேலூயா துதி மகிமை என்றும்**
**இயேசுவுக்கே செலுத்திடுவோம்"**

**கணிப்பீடு :**
- உயிர்த்த இயேசுவுக்கு நன்றி செலுத்திப் பாடலைப் பாடுவார்.

**நடைமுறை வாழ்வின் பயன்பாட்டிற்காக :**
- மரணத்தை வென்ற இயேசுவுக்கு நன்றி செலுத்தி ஜெபம் செய்தல்..

# கணிப்பீடு செய்தல்

## 1.0 அறிமுகம்

மாணவரின் கல்வி கற்றல் முன்னேற்றம் மற்றும் முக்கிய தீர்மானம் எடுத்தல் என்பனவற்றுக்குத் தகவல் சேகரித்தல் அத்தியாவசியம். இவ்வாறான நோக்கத்துடன் ''தகவல் சேகரித்தல்'' எனும் செயற்பாடானது ''கணிப்பீடு செய்தல்'' எனக் கருதப்படுகின்றது.

மாணவரின் கல்வி முன்னேற்றம் பற்றிய தீர்மானம் தொடர்பாகத் தகவல்களைச் சேகரிப்பதற்கு பல்வேறு முறைகள் காணப்படுகின்றன. இவற்றை இரு பகுதிகளாக விரிவாக வகைப்படுத்தலாம்.

விசேடமான முன் ஆயத்தம் எதுவுமின்றி மாணவர் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடடிருக்கும் சந்தர்ப்பத்தில் எதுவித இடையூறுகளும் ஏற்படாது தகவல் சேகரித்தல் - விதிமுறையற்ற கணிப்பீடு செய்தல் எனப்படும்.

i. முன் ஆயத்தமுடன் திட்டமிடப்பட்டு கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை தற்காலிகமாக நிறுத்தி முழு அவதானத்தையும் செலுத்தித் தகவல் சேகரித்தல் - முறையான கணிப்பீடு செய்தல் எனப்படும்.

ii. அதே போன்று கற்றல்- கற்பித்தல் செயற்பாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் கணிப் பீட்டைச் செய்யலாம்.

- கற்றல் பகுதியை ஆரம்பிக்கு முன் (ஆயத்தம் மற்றும் கடந்தவற்றை கண்டு பிடித்தலுக்கு)
- கற்றல் பகுதியின் இடையில் அடிக்கடி (மாணவரின் கற்றல் முன்னேற்றம் மற்றும் கற்றலின் போது ஏற்படும் சிரமங்களைக் கண்டுபிடித்தலுக்கு)
- கற்றல் பகுதியின் இறுதியில் (மாணவர் குறிப்பிட்ட கற்றல் பகுதியை வெற்றிகரமாக முடித்துள்ளனரா என்பதைக் கண்டறிவதற்காக)

இவ்வாறாக கணிப்பீட்டு முறைகள் பலவற்றை அறிந்து கொள்ள முடியும். அவற்றுள் விதிமுறைகளின்றி எப்போதும் அல்லது தொடர்ச்சியாகச் செய்யப்படும் கணிப்பீடானது ஆரம்ப பருவ நிலையில் விசேட இடத்தைப் பெற்றுள்ளது.

## 2.0. விதிமுறைகளற்ற தொடர்ச்சியான கணிப்பீடு செய்தல்

### 2.1 தகவல் சேகரித்தல்

- ''விதிமுறைகளற்ற தொடர்ச்சியான கணிப்பீடு செய்தல்'' என்பதன் கீழ் பயன்படுத்தக் கூடிய முறைகளில் 1 ஆரம்ப பருவத்தில் பின்வருவன முக்கியமாகும்.
- மாணவரை அவதானித்தல்
- செயற்பாடுகளில் குழுவாக ஈடுபடும் வேளையில்
- விளையாட்டுக்கள்/ மகிழ்ச்சியான நிகழ்வுகளில் ஈடுபடும் வேளையில்
- சுயாதீனமாக வேலைகளில் ஈடுபடும் வேளையில்

இங்கே ஒரு சந்தர்ப்பத்தில் தனி ஒரு மாணவனின் தனிச் செயல்பாட்டில் மட்டுமே ஆசிரியரின் கவனம் செலுத்தப்படவேண்டும்.

- ஒப்படை, வீட்டுவேலை, தனியாகச் செய்யும் வேலைகள் போன்றனவற்றுக்குப் புள்ளி வழங்குதல்.

இங்கு பிள்ளைகளால் செய்யப்படும் தவறுகள் மற்றும் எண்ணக்கரு அறியாமை எனபனவற்றில் ஆசிரியர் விசேட கவனத்தைச் செலுத்த வேண்டும். தவறு செய்யும் சந்தர்ப்பத்தில் அல்லது எண்ணக்கரு அறியாமை போன்றனவற்றுக்கு அடிப்படைக் காரணிகளைக் கண்டு பிடித்து மிக விரைவில் மாற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

- மாணவருடன் தனியாகவும் குழுவாகவும் கதைத்தல்.
- மாணவரிடம் வாய்மொழி வினாக்கள் கேட்டல்
- மாணவரைச் செவிமடுத்தல் (மாணவர் - மாணவர் கலந்துரையாடல், குழு வேலைகளில்)
- மாணவர் வகுப்பறையின் முன்னால் வந்து முன்வைத்தல், முன்மாதிரிகளை அவதானித்தல், செவிமடுத்தல்
- மாணவரின் ஒப்படை ஏனைய ஆக்கச் செயற்பாடுகள் தொடர்பான விசேட எழுத்து வேலை தொடர்பான தாள்களைக் கோவைப்படுத்தல். (செயற் காரணிகளைக் கோவைப் படுத்தல்)

இவ்வாறான முறைகளைத் தகவல் சேகரிக்கும் வேளைகளில் கற்றல் எதிர்பார்ப்பில் தீர்மானம் எடுக்கும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலக்காகக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு மாணவனும் ஏதாவது பாடவிடயத்தில் விதந்துரைத்து ஒவ்வொரு கற்றல் எதிர்பார்ப்பையும் நோக்கி வெற்றிகரமாக முடித்தாரா? அன்றேல் அது தொடர்பாக சிரமப்படுகின்றாரா? எனத் தீர்மானித்து எடுத்த தீர்வானது ஏற்ற வகையில் அட்டவணை யில் குறிப்பிட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2.2 தகவல் அறிக்கை அட்டவணையும் அதனைப் பயன்படுத்தலும்

இந்த விடயத்தின் கீழ் ஒவ்வொரு கற்றல் எதிர்பார்ப்புக்கும் பொருத்தமாக ஒவ்வொரு மாணவர் தொடர்பாகச் சேகரிக்கும் தகவல்களை முறையான அறிக்கையாகச் சமர்ப்பித் தலுக்கு மாதிரித் தாள் தரப்பட்டுள்ளது.

நீங்கள் சேகரிக்கும் தகவலை கீழ்க் காணப்படும் தீர்மானங்களின் அடிப்படையில் தெரிவு செய்து பொருத்தமான கூட்டில் அடையாளத்தைக் குறித்து அறிக்கை தயாரிக்கவும்.

| தீர்மானம் | அடையாளம் |
|---|---|
| வெற்றிகரமான செய்வார் | √ |
| சிரமத்துடன் செய்வார் | • |

ஏதாவது ஒரு மாணவன் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ''•''அடையாளத்தை எடுத்திருப்பின் ஆசிரியர் அந்த மாணவரில் விசேட கவனம் செலுத்த வேண்டும். மாணவன் முகம் கொடுக்கும் சிரமத்தை அறிந்து அதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு கணிப்பீட்டை நடாத்த வேண்டும். குறிப்பிட்ட அடையாளத்தை ''√'' என மாற்றும் வரையில் ஆசிரியரால் செயல்கள் நீடிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அதே போன்று கற்றல் எதிர்பார்ப்பில் அநேக மாணவர் ''•'' அடையாளத்தை பெற்றிருப்பின் குறிப்பிட்ட விடய ஆசிரியரின் கற்பித்தல் முறையில் தாக்கத்தை ஏற்படுத்தும் வாய்ப்பு உண்டு. அதனால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் தமது கற்பித்தல் முறைகளை மீண்டும் கவனத்தில் கொண்டு வேறு கற்பித்தல் முறைகளை மாற்றி அமைக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2.3 சிறு குறிப்பு எழுதி அறிக்கை சமர்ப்பித்தல்

ஒவ்வொரு மாணவனும் தொடர்பாக அவர்களது சிறப்பு ஆற்றல் குறித்த சிறு தகவல் குறிப்பு எழுதப்படவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர் வெளிப்படுத்தும் விசேட ஆற்றல் அல்லது பலவீனம் போன்றன இவற்றுள் உள்ளடக்கப்படும். ஒவ்வொரு மாணவரினதும் ஆற்றல்களும் தனித்தனியாக அல்லது கோவையாக இருத்தல் வேண்டும். இவ்வாறு செய்யும் போது திகதி விசேட அவதானங்கள் குறித்து சிறு விபரம் எழுதப்படுதல் எதிர்பார்க்கப்படுகின்றது.

## கிறிஸ்தவ பாடத்தைக் கணிப்பீடு செய்தல் - தகவல் அறிக்கை அட்டவணை

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | வெற்றிகரமான செய்வார் √<br>சிரமத்துடன் செய்வார் • |
| | | | | 1. இறைவன் படைத்த உடலை மதித்துத் துதிப் பாடல் பாடுவார். |
| | | | | 2. இறைவன் படைத்த புவி வெய்யில் மழை என்பனவற்றை மதித்துப் பாடல் பாடுவார். |
| | | | | 3. கொலாஜ் முறையில் இணைந்து மரம் செய்து இறைவனைத்துதிப்பார். |
| | | | | 4. தமது பெற்றோர் பாதுகாவலருக்கு அன்பை வெளிகாட்ட வாழ்த்து மடல் தயாரிப்பார். |
| | | | | 5. சகோதர சகோதரிகளின் அன்பும் பாதுகாப்பும் கிடைத்த சந்தர்ப்பங்களைக் கூறுவார். |
| | | | | 6. உறவினர் நண்பரின் சரிதைகளை நடித்து இறைவனுக்கு அன்பைக் காட்டுவார். |
| | | | | 7. ஆசிரியருக்கு வாழ்த்துமடல் வழங்கி அன்பை வெளிப்படுத்துவார். |
| | | | | 8. நற்பண்புகளை வெளிப்படுத்தி முன்மாதிரியான கிறிஸ்தவ பிள்ளையாக வாழ்வார். |
| | | | | 9. பெற்றோருடன் இணைந்து நற்செயல்களில் ஈடுபடுவார். |
| | | | | 10. நல்ல பிளளையில் காணப்படும் நற்பண்புகளைக் குறிப்பிடுவார். |
| | | | | 11. கொலாஜ் முறையில் இயேசு எனும் பெயரைத் தயாரிப்பார்.. |
| | | | | 12. இயேசு செய்த அற்புதத்தை விபரிப்பார். |
| | | | | 13. தனிப்பட்ட ஜெபம் செய்வார். |
| | | | | 14. தூய ஆவியானவரைப் பற்றிய பாடலைப் பாடுவார். |
| | | | | 15. நல்ல சமாரியரின் கதையைக் கூறுவார். |
| | | | | 16. சமாரியர் தனது உடைமைகளைப் பகிர்ந்து கொண்ட முறைகளை விபரிப்பார். |
| | | | | 17. பேதம் பாராது ஒருவரையொருவர் பராமரிக்கும் சித்திரம் வரைவார். |
| | | | | 18. இசைக்கருவிகள் பாவித்து பல்லவிகள் பாடுவார். |
| | | | | 19. அரச அலுவலரின் கதையைக் கூறுவார். |
| | | | | 20. உயிர்த்த இயேசுவுக்கு நன்றி கூறிப் பாடல் பாடுவார். |